**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

Off. : 0413-2333399, 2335530
2335328
Fax : 0413-2333135
Res. : 5, Ellaiamman Koil Street
Puducherry-605 001
0413-2339099
e-mail: cm.pon@nic.in

सत्यमेव जयते

Date: 02.09.2017

## திருவோண வாழ்த்துச் செய்தி

தன் நாட்டை சிறந்த முறையில் ஆண்டு வந்த மகாபலி மன்னன் தன்னாட்டு மக்கள் அனைத்து வளங்கள் பெற்று மகிழ்வுடன் வாழ வேண்டும், அதைத்தாம் காண வேண்டும் என்று வேண்டிக் கொண்டதை மகாவிஷ்ணு ஏற்றுக் கொண்டு வரமளித்ததாகவும், அதனால் வருடத்தின் முதல் நாள் அதாவது மலையாள புத்தாண்டு பிறப்பு அன்று மகாபலி மன்னன் பூமி வந்து தனது மக்களையும் நாட்டையும் பார்த்து செல்வதாக உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் கொண்டாடப்படும் ஓணம் திருநாளைக் கொண்டாடும் புதுச்சேரி மாநில மலையாள சகோதர சகோதரிகளுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஓணம் திருநாளுக்கான மற்றொரு சிறப்பு, இத்திருநாள் மதங்களைக் கடந்து மலையாள மக்கள் அனைவராலும் கொண்டாடப்படுவதாகும். வேற்றுமையில் ஒற்றுமை என்ற சாகாவரம் பெற்ற வார்த்தைகளுக்கு உரமிட்டு, மெய்ப்பித்துக்காட்டும் இந்த கொண்டாட்டத்தில் எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றேன்.

"நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும்"

புதுவை மாநிலத்தில் உள்ள மலையாள சமுதாயனத்தினருக்கும் அனைவருக்கும் மகிழ்ச்சியான வாழ்வும், சகோதரத்துவமும், மனிதநேயமும், தழைக்க வேண்டுமென்றும் இந்த திருவோணத்திருநாளில் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

வே. நாராயணசாமி.

(வே. நாராயணசாமி)